**மே – 30**

# சர்வதேசச் செய்திகள்

## உலக அமைப்புகளில் பாலஸ்தீனம்

- பாலஸ்தீனியர்கள் இரண்டு உலக அமைப்புகளிலும், இரசாயன ஆயுதங்களின் பரவலை தடுக்கும் உலகளாவிய ஒப்பந்தத்திலும் இணைந்துள்ளனர்.
- பாலஸ்தீனியர்கள் ஜெனிவாவை மையமாகக் கொண்ட ஐ.நா. வர்த்தக அமைப்பான UNCTAD (United Nations Conference on Trade and Development) என்ற அமைப்பிலும், வியன்னாவைச் சேர்ந்த தொழிற்துறை அமைப்பான UNIDO (United Nations Industrial Development Organization) என்ற அமைப்பிலும் இரசாயன ஆயுதங்கள் ஒப்பந்தம் (Chemical Weapons Convention) அல்லது இரசாயன ஆயுதங்கள் தடுப்பு அமைப்பிலும் (Organization for the Prohibition of Chemical Weapons - OPCW)) இணைந்துள்ளனர்.
- ஐக்கிய நாடுகள் அமைப்பில், நிறுவனங்களில் உறுப்பினர் பதவியை கேட்டிடவும், சர்வதேச ஒப்பந்தங்களில் உறுப்பினர்களாகவும் வழிவகை செய்யும் உறுப்பினரல்லாத பார்வையாளர் தகுதியை பாலஸ்தீனியர்கள் கொண்டுள்ளனர்.
- இந்த மாற்றம் சர்வதேச ராஜ்ஜிய உறவுகளில் பாலஸ்தீனியத்தின் தகுதியை உயர்த்தும் அதே வேளையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இஸ்ரேலின் தலைநகராக ஜெருசேலத்தை அங்கீகரித்து நெருக்கடியை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சமயத்தில் நிகழ்ந்துள்ளது.

- OPCW, UNCTAD மற்றும் UNIDO ஆகிய மூன்றும் தமது நடவடிக்கைகளுக்காகவும் வருடாந்திர வரவு செலவுத் திட்டங்களுக்காகவும், ஐ.நாவின் உறுப்பினர்களிடமிருந்து வரும் விருப்பப்படியான நிதிப் பங்களிப்பை நம்பியுள்ளன.
- முன்னதாக OPCW அமைப்பு திஹேக் நகரில் பாலஸ்தீனிய அரசு, இரசாயன ஆயுதங்கள் தடுப்பு ஒப்பந்தத்தில் 193வது நாடாக அனுமதிக்கப்படும் என்று அறிவித்துள்ளது.
- ஒட்டுமொத்த பேரழிவு ஆயுதங்களையும் அழிக்க எண்ணும் இரசாயன ஆயுதங்கள் ஒப்பந்தத்தை இஸ்ரேல், எகிப்து, வடகொரியா, தென் சூடான் ஆகிய நான்கு நாடுகள் இன்னும் அதில் உறுப்பினராக சேர உறுதி அளிக்கவில்லை.

- 2012ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை பாலஸ்தீனத்தை உறுப்பினரல்லாத பார்வையாளர் தகுதிக்கு உயர்த்தியது.
- சர்வதேச காவல்துறை, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், யுனெஸ்கோ மற்றும் தற்போதைய OPCW ஆகிய நான்கும் பாலஸ்தீனியப் பகுதிகளை அரசு என்று குறிப்பிடுகின்றன.

### அமெரிக்கா தயாரித்த F-35 இரகசிய போர் விமானம் பாதுகாப்புப் பணியில்


- அமெரிக்கா தயாரித்த F-35 இரகசிய போர்விமானத்தை பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்திய முதல் நாடு இஸ்ரேல் ஆகும்.
- லாக்ஹீட் மார்ட்டின் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட, கூட்டு போர் தாக்குதல் விமானம் என்றும் அறியப்படும் F-35 விமானம் இஸ்ரேலில் ஹீப்ரு பெயரில் பலமான அல்லது அடிர் என்றும் அழைக்கப்படுகிறது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### காந்தப்புலப் பண்புகள் - ரூதெனியம்

- அமெரிக்காவின் மின்னசோட்டா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் அறை வெப்பநிலையில் விந்தையான காந்தப் புல பண்புகளை அல்லது பெர்ரோமேக்னடிசத்தை (Ferromagnetic) கொண்டிருக்கும் நான்காவது மூலக்கூறு வேதியியல் மூலக்கூறான ரூதெனியம் ஆகும் எனக் கண்டறிந்துள்ளனர்.
- இதுவரையில், அறை வெப்பநிலையில் மூன்று தனிம அட்டவணை மூலக்கூறுகளான இரும்பு, கோபால்ட் மற்றும் நிக்கல் ஆகியவற்றில் மட்டுமே பெர்ரோமேக்னடிக் பண்புகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.




- ஆராய்ச்சியாளர்கள், மிக மெல்லிய இழைகளை பயன்படுத்தி பெர்ரோமேக்னடிக் பகுதியை அழுத்தியதன் மூலம் ருதெனியம் என்பது நான்காவது ஒற்றை மூலக்கூறு கொண்ட பெர்ரோமேக்னடிக் பொருளாக இருக்கும் எனக் கண்டறிந்துள்ளனர்.
- இந்த கண்டுபிடிப்பு காந்தப்புலப் பொருட்களை பயன்படுத்தும் உணர்விகள், கம்ப்யூட்டர் நினைவகம் அல்லது தர்க்க சூத்திர (Logic) தொழிற்துறையில் பயன்படுத்தப்படும் கருவிகள் மற்றும் பிற பொருட்களை மேம்படுத்த உதவும்.
- பயன்பாட்டு உபயோகத்தின் அடிப்படையில், விஷத்தன்மையுடைய ஆக்சிடேஷன் (Oxidation) முறைக்கு எதிர்ப்பு கொண்டிருப்பதோடு, காந்தப்புல நினைவலைகளை அளவிட முக்கிய தேவையாக உள்ள அதிகபட்ச வெப்ப நிலைத் தன்மையையும் கொண்டிருப்பதால் ருதெனியம் ஒரு ஆச்சரியமூட்டும் பொருளாகும்.
- ருதெனியம், Rn என்ற அடைமொழி கொண்ட வேதியியல் மூலக்கூறுவாகும். இதன் அணு எண் (Atomic Number) 44 ஆகும்.
- இது பிளாட்டின வகையிலான தனிம அட்டவணையைச் சார்ந்த அரிதான இடைப்பட்ட (Transition) உலோக வகையை சார்ந்ததாகும்.
- பிளாட்டின வகையைச் சேர்ந்த மற்ற உலோகங்களைப் போல், இது பெரும்பான்மையான மற்றைய இரசாயனங்களுக்கு மந்தமாக (inert) உள்ளது.
- இது 1844ம் ஆண்டில் இரஷ்யாவில் பிறந்த விஞ்ஞானியான கார்ல் எர்ன்ஸ்ட் என்பவரால் கண்டறியப்பட்டது.
- இது ரஷ்யாவின் லத்தீன் பெயரைக் கொண்டு ருதெனியம் என அழைக்கப்படுகின்றது.
- ருதெனியம் பொதுவாக பிளாட்டினம் தாதுக்களில் சிறிய பகுதியாக மட்டுமே காணப்படுகின்றது.
- இது மின்சார இணைப்புகள் மற்றும் பட்டையான இழை கொண்ட எதிர்ப்பான்களில் அணிகலத் தடுப்பானாகவும் உபயோகிக்கப்படுகின்றது.
- இதன் சிறிய பயன்பாடு பிளாட்டினம் கலவைகளிலும் இரசாயன ஊக்கிகளிலும் உபயோகிக்கப்படுகின்றது.

# மாநிலச் செய்திகள்

## உலகின் பெரிய ஜடாயு பறவை சிற்பம்

- கேரள சுற்றுலாத் துறை கேரளாவின் கொல்லம் மாவட்டத்தில் உள்ள சடையமங்கலம் எனும் இடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜடாயு புவி மையத்தில் உலகின் மிகப் பெரிய பறவை சிற்பத்தை நிர்மாணிக்க உள்ளது.




- இராமாயணத்தின் ஒரு கதாபாத்திரமான ஜடாயு பறவையின் மாதிரி 200 அடி நீளம், 150 அடி அகலம், 65 அடி உயரம் கொண்டு, கடல் மட்டத்திலிருந்து 1000 அடி உயரத்தில் உள்ள பாறையின் மீது பொருத்தப்பட்டுள்ளது.
- 65 ஏக்கரில் பரவியுள்ள இந்த சிற்பம் 100 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## லெப்டினன்ட் ஜெனரல் ஜோராவர் சந்த் பக்ஷி

- இந்தியாவின் மிக அதிகமாக மதிப்பளிக்கப்பட்ட படைத்தளபதிகளில் ஒருவரான லெப்டினன்ட் ஜோராவர் சந்த் பக்ஷி புதுதில்லியில் தமது 97வது வயதில் காலமானார்.
- தமது நண்பர்களால் பிரியமாக ஜோரு என்று அழைக்கப்படும் இவர், தமது வீரத்திற்காக மகாவீர் சக்ரா, வீர் சக்ரா, படைகளில் குறிப்பிடத்தக்கவர் (Mention-in-Despatches) ஆகிய விருதுகளோடு, மேன்மை தங்கிய சேவைக்காக பரம் விசிஷ்ட சேவா பதக்கத்தையும் பெற்றுள்ளார்.
- இவரது முதல் முக்கியமான பங்களிப்பு இரண்டாம் உலகப் போரில் பர்மாவில் வலுவான படை கொண்டிருந்த ஜப்பானிய படைகளுக்கு எதிராக போரிட்டமையே ஆகும். இதற்காக இவர் படைப்பிரிவுகல் குறிப்பிடத்தக்கவர் (Mention–in-Despatches) என்ற விருதைப் பெற்றுள்ளார்.
- பிரிவினைக்கு பிறகு இவர் இந்திய ராணுவத்தின் ஐந்தாவது கூர்க்கா துப்பாக்கிகள் என்ற படைப்பிரிவிற்கு மாற்றப்பட்டார். அதன் பின் 1947-48ம் ஆண்டுகளில் நடந்த இந்திய-பாகிஸ்தானிய யுத்தத்தில் பங்கெடுத்தார். இதற்காக அவருக்கு 1948ம் ஆண்டு ஜூலை மாதம் வீர் சக்ரா விருது வழங்கப்பட்டது.

- 1949ம் ஆண்டு, மதிப்புமிக்க உளவு பார்க்கும் சேவைக்காக இந்திய ஆயுதப்படை வீரர்களுக்கு வழங்கப்படும் மெக்கிரேகர் பதக்கத்தை பெற்றார்.




- 1965ஆம் ஆண்டு யுத்தத்தில் பாகிஸ்தான் ராணுவத்திடமிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க மற்றும் யுக்தி வாய்ந்த ஹாஜிபிர் கணவாயை கைப்பற்றியதில் பக்ஸ் முக்கிய பங்கு வகித்தார். இதற்காக அவருக்கு மகாவீர் சக்ரா அளிக்கப்பட்டது.
- மேலும், இவர் 1971ம் ஆண்டு யுத்த நடவடிக்கைகளில் சீனாவின் மக்கள் விடுதலை ராணுவத்திற்கு எதிராக கோழிக் கழுத்துப் பகுதியை (Chicken Neck Corriodr) கைப்பற்றியதில் முக்கிய பங்கு வகித்தார். இதற்காக இவருக்கு பரம் விசிஷ்ட சேவா பதக்கம் வழங்கப்பட்டது.

## நாரி சக்தி புரஸ்கார் விருது 2017

- தாரிணி என்ற இந்தியக் கடற்படை கப்பல் பயண அணியைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் மேனகா காந்தியால் 2017ம் ஆண்டிற்கான நாரி சக்தி புரஸ்கார் விருது வழங்கப்பட்டது.



- அனைத்தும் பெண்களாக உள்ள ஆறு பேர் கொண்ட அணியைச் சேர்ந்த லெப்டினன்ட் கமாண்டர் வர்திகா ஜோஷி, லெப்டினன்ட் கமாண்டர் பிரதீபா ஜம்வால், லெப்டினன்ட் கமாண்டர் ஸ்வாதி பதர்பலி, லெப்டினன்ட் ஐஸ்வர்யா பூபதி, லெப்டினன்ட் S.H.வித்யா தேவி மற்றும் லெப்டினன்ட் பாயல் குப்தா ஆகியோர் இந்த விருதைப் பெற்றுக் கொண்டனர்.
- ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8ம் தேதி ராஷ்டிரபதி பவனில் நாரி சக்தி விருதுகளை வழங்கினார்.
- அப்போது INSV தாரிணி அணி கடற்பயணத்தில் ஈடுபட்டு இருந்ததினால் அவர்களுக்கு அவ்விருது அப்போது அளிக்கப்பட முடியவில்லை.
- இந்த INSV தாரிணி அணி என்பது இந்திய கடற்படையின் புதுமையான திட்டமான நாவிகா சாகர் பராக்கிரம் என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகும்.
- அனைத்து உறுப்பினர்களும் பெண்களால் ஆன இந்த அணி, கடற்படையில் கடற்பயண நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காகவும், இந்திய அரசின் பெண்கள் மேம்பாட்டுக்கான பங்களிப்பை குறிப்பிட்டுக் காட்டுவதற்காகவும் உலகம் முழுவதும் சுற்றி வரத் திட்டமிட்ட அணியாகும்.
- அணியின் ஒவ்வொரு உறுப்பினரும் குறைந்தபட்சம் 20000 நாட்டிகல் மைல்கல் கடற்பயண அனுபவத்தை கொண்டிருப்பர்.
- இந்த திட்டம் உலக நடைமேடையில் பெண் சக்தியின் உந்துவிசையை வெளிகாட்டிட எண்ணுகிறது.
- இந்த பயணம், உள் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட INSV தாரிணி கப்பல் பயணத்தின் மூலம் இந்தியாவில் தயாரிப்போம் (Make in India) என்ற திட்டத்தின் வெற்றியை பறை சாற்றிடவும் மேற்கொள்ளப்பட்டது.
- ஆறு பேர் கொண்ட இந்த பெண்கள் அணியை தலைமை தாங்கி நடத்தியது லெப்டினன்ட் கமாண்டர் வர்திகா ஜோஷி ஆகும். இந்த அணி தமது முதல் உலகளாவிய சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வெற்றிகரமாக முடித்துள்ளது.
- கடலில் 199 நாட்கள் இருந்து கொண்டு மொத்தம் 254 நாட்கள் நீடித்த இந்த பயணம் 21,600 நாட்டிகல் மைல் தூரத்தை கடந்துள்ளது. இதில் 5 துறைமுகங்களில் ஆஸ்திரேலியாவின் பிரேமான்டில், நியூசிலாந்தின் லிட்டில்டான், பாக்லாந்தின் ஸ்டான்லி துறைமுகம், தென்னாப்பிரிக்காவின் கேப் டவுன் மற்றும் கடைசியாக மொரிசீயஸ் ஆகிய இடங்களில் நின்று இந்த அணி இறுதியில் கோவாவிற்கு திரும்பியது.
- எல்லா ஆறு உறுப்பினர்களும் மூன்று ஆண்டுகளாக கேப்டன் திலீப் தோண்டேவிடம் பயிற்சியளிக்கப்பட்டனர். திலீப் 2009 முதல் 2010 கால கட்டத்தில் உலகை தனியாக சுற்றி வந்த முதல் வெற்றிகரமான இந்தியர் ஆவார்.

## ESPN உலகப் புகழ் 100 பேர் பட்டியல்

- தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக போர்த்துக்கீசிய கால்பந்து வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ ESPN உலகப்புகழ் 100 பேர் (ESPN World Fame 100 List) பட்டியலில் அமெரிக்க கூடைப்பந்து வீரர் லெப்ரான் ஜேம்ஸ் மற்றும் அர்ஜெண்டினாவைச் சேர்ந்த நீண்ட கால போட்டி கால்பந்து வீரரான லியோனல் மெஸ்ஸி ஆகியோரை முந்தி முதலிடம் பிடித்துள்ளார்.




- மூன்று முறை NBA சேம்பியனான லெப்ரான் ஜேம்ஸ் இந்தப் பட்டியலில் இரண்டாமிடத்தையும், பார்சிலோனாவிற்கான தமது ஒன்பதாவது வெற்றியுடன் மெஸ்ஸி மூன்றாமிடத்திலும் உள்ளனர்.
- கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் பார்சிலோனாவிலிருந்து பாரீஸ் எஸ்டி ஜெர்மெயின் (Paris ST Germain) என்ற அணிக்காக 222 மில்லியன் யூரோக்கள் என்ற ஊதியத்துடன் இடம் மாறியதன் மூலம் உலகின் மிக விலையுயர்ந்த கால்பந்து வீரரான பிரேசிலின் நெய்மார் இப்பட்டியலில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளார்.

# விளையாட்டுச் செய்திகள்

## UEFA சேம்பியன் போட்டி

- UEFA சேம்பியன் போட்டி என்பது ஐரோப்பிய கால்பந்து சங்கங்களின் அமைப்பால் நடத்தப்படும் வருடாந்திர கண்டத்திற்கான கிளப் கால்பந்து போட்டியாகும். இதில் ஐரோப்பாவின் தலைசிறந்த கால்பந்து கிளப் அணிகள் பங்கேற்கின்றன.
- 2018 UEFA சேம்பியன் போட்டி மொத்தத்தில் 63வது போட்டியாகவும், ஐரோப்பிய கோப்பை என்ற பெயரிலிருந்து UEFA சேம்பியன் போட்டி என்று மாறிய பிறகு நடத்தப்படும் 26வது போட்டியாகவும் இருக்கின்றது.
- ஸ்பெயினைச் சேர்ந்த ரியல் மாட்ரிட் என்ற அணி இறுதிப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, ஒட்டு மொத்தத்தில் 13வது முறையாக UEFA சேம்பியன் பட்டத்தையும், ஐந்து ஆண்டுகளில் நான்காவது முறையாகவும் வெற்றி பெற்றுள்ளது.
- 1974-76 காலகட்டத்தில் தொடர்ச்சியாக மூன்று முறை UEFA சேம்பியன்ஸ் கோப்பை அல்லது ஐரோப்பிய கோப்பைகளை வென்ற பேயர்ன் முனிச் அணிக்குப் பிறகு ரியல் மாட்ரிட் அணியே தொடர்ச்சியாக வெற்றி பெற்ற முதல் அணியாகும்.
- ரியல் மாட்ரிட், இங்கிலாந்தைச் சேர்ந்த லிவர்பூல் அணியை தோற்கடித்தது.
- இப்போட்டி 2018ம் ஆண்டு மே மாதம் 26ம் தேதி உக்ரைனின் கிவ் நகரில் NSC ஒலிம்பிக்ஸ்கை (Olimpiyskiy) மைதானத்தில் நடத்தப்பட்டது.



- 2007ம் ஆண்டில் கிளாரன்ஸ் சீடோர்ப் மற்றும் 2015ம் ஆண்டில் ஆண்டிரஸ் இனிஸ்டா ஆகியோர் ஏற்படுத்திய சாதனைகளுக்குப் பிறகு சேம்பியன் கோப்பையை ஐந்து முறை வென்ற முதல் வீரராக கிறிஸ்டியானோ ரொனால்டொ உருவெடுத்துள்ளார்.



- முதல் மாற்று ஆட்டக்காரராக இரண்டு கோல்கள், சாம்பியன்ஸ் கோப்பை இறுதி ஆட்டத்தில் அடித்து, ஆட்டநாயகன் விருதை பெற்ற வீரராக கேரேத் பேல் உருவெடுத்துள்ளார்.

- - - - - - - - - - - - - - -